# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 246/மா/2023**
**நாள் : 07.08.2023**

திரு. B. விஜயகுமார்,
சென்னை– 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் என்பவரின் 19.11.2022 நாளிட்ட மனு 21.11.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 246/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15, என்ற முகவரியில் வசிக்கும் திரு B.விஜயகுமார் என்பவரின் 19.11.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"சென்னை-600 001, மண்டலம்-05, வார்டு-57, சௌகார் பேட்டை, அண்ணா பிள்ளை தெரு, கதவு எண்.138/129 (ஜெயின் கோவில் அருகில்) என்ற இடத்தில் திரு. K.R. ஸ்ரீனிவாசன் என்பவரால் சென்னை மாநகராட்சியிடம் எந்த விதமான கட்டிட அனுமதியில்லாமல் இரண்டு மாடி வணிக கட்டிடம் கட்டியது தொடர்பாக நான் பலமுறை புகார் அளித்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்-05ல் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. நான் அறிந்த வகையில் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்தின் உரிமையாளர் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர் என்பதால் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டு மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என தெரிய வருகிறது. சென்னை பெருநகர மாநகராட்சியின் கடந்த 2022-23 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்படி

ரூ.788.58 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் ஆக போடப்பட்டது. மேலும் பல நல்ல திட்டங்கள் நிதி இல்லாமல் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் அனுமதியற்ற விதிமீறல் கட்டிடங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உரிய தொகைகளை வசூலித்தால் சென்னை பெருநகர மாநகராட்சியின் நிதிநிலைமை சீராகும். இந்த புகார் தொடர்பாக நான் ஏற்கனவே பலமுறை மேற்கண்ட அலுவலருக்கு புகார் அனுப்பியும் அவர் தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2. எனவே இத்துடன் நான் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எனது மனு மற்றும் ஆவணங்களின் நகல்கள் இணைத்து அனுப்பியுள்ளேன். ஆகவே உயர்திரு. ஐயா அவர்கள் எனது புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீதும் அதன் மீது தற்போதுவரை நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 25.07.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 21.07.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 25.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ல் வார்டு 57 சௌகார் பேட்டை, அண்ணாபிள்ளை தெரு, கதவு எண்.138/129 (ஜெயின் கோயில் அருகில்) என்ற இடத்தில் திரு K.R. சீனிவாசன் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் இரண்டு மாடி வணிக கட்டடம் கட்டியது குறித்து சென்னை மாநகராட்சிக்கு புகார் மனுக்கள் அனுப்பியும், சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட எனது மனுவின் மீது மாநகராட்சியால் உரிய நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5-ன் செயற்பொறியாளர், உதவி செயற் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் 25.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்.**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ல் வார்டு 57, சௌகார் பேட்டை, அண்ணாபிள்ளை தெரு, கதவு எண்.138/129 என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடம் குறித்து நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட கட்டடத்தில் விதி மீறல்கள் கண்டறியப்பட்டு 19.08.2022 அன்று Stop Work Notice / Notice Calling for Approved Plan தாக்கீதும் அதனை தொடர்ந்து 06.09.2022 அன்று Lock and Seal தாக்கீதும் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் அனுமதி பெற்று மேற்கண்ட கட்டத்திற்கு நேரடியாகச் சென்று மூடி

முத்திரையிடுவதற்கான மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நேர்வு தொடர்பாக வழங்கப்பட்ட தாக்கீதுகளின் நகல்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

**இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.**

மனுதாரர் திரு. B. விஜயகுமார், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -5, சௌகார்பேட்டை, அண்ணாபிள்ளை தெரு கதவு எண்.138/129ல் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் K.R. சீனிவாசன் என்பவர் இரண்டு மாடி வணிக கட்டடம் கட்டியது குறித்து, மனுதாரர் புகார் மனு அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -5ன் அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், எனவே தன் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு உரிய உத்திரவுகளை பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5 பொறியாளர்கள் தங்களது வாக்குமூலத்தில் சென்னை, சௌகார் பேட்டை, அண்ணாபிள்ளை தெரு கதவு எண்.138/129ல் கட்டப்பட்ட இரண்டு மாடி கட்டடம் ஆய்வு செய்யப்பட்டதில் விதி மீறல்கள் கண்டறியப்பட்டு 19.8.2022 அன்று Stop Work Notice / Notice Calling for approved Plan தாக்கீதும், 6.9.2022 அன்று Lock and Seal தாக்கீது வழங்கப்பட்டது என்றும், இதன் தொடர்ச்சியாக ஆணையரின் அனுமதி பெற்று மேற்கண்ட விதிமீறல் கட்டடத்திற்கு நேரடியாக சென்று மூடி முத்திரையிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் தனது 29.9.2022 நாளிட்ட புகார் மனுவை பெருநகர சென்னை மண்டலம் -5ன் அலுவலகத்தில் அளிப்பதற்கு முன்பே, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -5ன் அலுவலர்கள் மேற்குறிப்பிட்ட விதிமீறல் கட்டடத்தின் மீது 19.8.2022 அன்றே சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டது வரவேற்கத்தக்க நிலையில், அதனைத் தொடர்ந்து மேற்கண்ட கட்டடத்திற்கு சட்டப்பூர்வமான தாக்கீதுகளை Tamil Nadu Town and Country Planning Act 1971ல் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் கட்டட உரிமையாளருக்கு வழங்கப்படாதது கண்டிக்கத்தக்கது ஆகும்.

எனவே மேற்கண்ட விதிமீறல் கட்டடத்தின் மீது பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ன் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு உரிய சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -5ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

The abnormal delay committed by the zonal officials after issue of stop work notice in 8/22 is censured by the Forum. This exposes a sad lack of commitment and direction on the part of the zonal officials concerned whose such conduct promotes building violations by sending wrong signals in the minds of the wrong doers who take the officials for granted without any moral fear. The Greater Chennai Corporation Commissioner is directed to launch

disciplinary action against the official delinquents who kept quiet and collusive for 1 year and send a report to this Forum in the next 45 days.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு, துர்கா தேவி நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
மண்டலம் – 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
62, பேசின் பிரிட்ஜ் சாலை, பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600 021.
4. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்